# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 106 | செவ்வாய்க்கிழமை Tuesday | 14.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# பெரம்பூர் எம்.எல்.ஏ. அலுவலகத்தை முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்



பெரம்பூரில் தனது சட்டமன்றஉறுப்பினர்அலுவலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார் முதல்-அமைச்சர்விஜய்.

அலுவலகத்தில் இயங்கும் இ-சேவை மையத்தையும் திறந்து வைத்தார்.தேர்தல்வெற்றிக்குப் பின் 2 மாதங்களுக்குப் பிறகு முதல்முறையாக பெரம்பூர் தொகுதிக்கு வருகை தந்துள்ளார்.

முதல்-அமைச்சர் விஜய் சட்டமன்றத் தேர்தலில் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதில் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பெரம்பூர் எம்.எல்.ஏ.வாக உள்ளார். தொகுதி மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, பெரம்பூர் தொகுதி அலுவலகம் சென்னை வியாசர்பாடி சர்மா நகர் 1-வது தெருவில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த அலுவலகத்தை முதல்-அமைச்சர் விஜய் திறந்து வைத்தார். தொடர்ந்து எம்.எல்.ஏ அலுவலக வளாகத்தில் இ -சேவை மையத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து, சர்மா நகர் 10ஆவது தெருவில் உள்ள நியாய விலைக் கடையினைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டையினை வழங்கினார். பொது இ - சேவை மையத்தை பார்வையிட்டு செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் முதல்-அமைச்சர் விஜய் கேட்டறிந்தார். பெரம்பூர் தொகுதிக்கான ரூ.100 கோடி மதிப்பிலான திட்டங்கள் குறித்து முதல்-அமைச்சருக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் கொண்டுவரப்பட உள்ள புதிய திட்டங்கள் குறித்து முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார். கே.ஏ.செங்கோட்டையன்,வெங்கடரமணன் உள்ளிட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் நிகழ்சியில் பங்கேற்றனர்.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, இன்று முதல் முறையாக அவர் தனது தொகுதிக்குச் சென்றதால் அவருக்கு த.வெ.க. நிர்வாகிகள் வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

எம்.எல்.ஏ. அலுவலகத்தில் தொகுதி மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகசெயலி ஒன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. செல்போன் செயலியான அதில், பொதுமக்கள் தங்களது குறைகளை எந்த நேரத்திலும் தெரிவிக்கலாம். பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களது குறைகளையும் புகார்களையும் தொகுதிஎம்.எல்.ஏ.வான முதல்-அமைச்சரிடம் நேரடியாகத் தெரிவிக்கும் வகையில் தொடங்கப்பட உள்ள இந்த செயலிக்கு 'மக்கள் சேவை தளம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. முதல்-அமைச்சர் விஜய் இந்த பிரத்யேக செல்போன் செயலியையும் நாளை அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார்.

விஜய்க்காகதனி அறை அலுவலகத்தின் முன்பகுதியில்,"பெரம்பூர்சட்டமன்ற உறுப்பினர் ச. ஜோசப் விஜய்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றிலும் காம்பவுண்டு சுவர் அமைக்கப்பட்டு, கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. முதல்-அமைச்சர் விஜய்க்காக தனி அறையும் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தினுள் தனியாக கம்ப்யூட்டர்கள் அமைக்கப்பட்டு, 10 பணியாளர்கள் தினமும் பொதுமக்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரம்பூரில் உள்ள ரேஷன் கடையில் ஸ்மார்ட் ரேஷன் கார்டு வழங்கும் திட்டத்தை முதல்-அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். புதிய ஸ்மார்ட் அட்டை வழங்கும் திட்டத்தை முதற்கட்டமாக 50 பேருக்கு வழங்கி முதல்-அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். புதிய ரேஷன் கடையில் 10 குடும்பங்களுக்கு அடையாளமாக ரேஷன் பொருட்களை முதல்-அமைச்சர் விஜய் வழங்கினார்.

# ஹார்முஸ் ஜலசந்தியை மூடியதாக அறிவித்த ஈரான்; எரிபொருள் விலை மீண்டும் உயரும் அபாயம்



உலக எண்ணெய் வர்த்தகத்தின் இதயமாக கருதப்படும் ஹார்முஸ் நீரிணையை மீண்டும் மூடுவதாக ஈரான் அறிவித்துள்ளது. ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டுப்போர் தாக்குதல் காரணமாக கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி 3 மாதங்களுக்கு ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டது.

இதனால் உலகநாடுகளில் எரிபொருள் பற்றாக்குறைஏற்பட்டு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. பல நாடுகளில் கியாஸ், பெட்ரோல், டீசல் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. அமைதி பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஹார் முஸ் நீரிணை திறக்கப்பட்டநிலையில் தற்போது மீண்டும் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெயின் விலை மேலும் உயர்ந்து பெட்ரோல், டீசல் விலை எகிறும் அபாயம்ஏற்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக புதிய ராணுவ தாக்குதல்களை அமெரிக்கா அதிகரித்து உள்ளது. இதுபற்றி அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு பிரிவான ராணுவ அதிரடி படையானசென்ட்காம்வெளியிட்ட செய்தியில், ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியை எளிதில் கடந்து செல்லும் வகையில், வர்த்தக கப்பல்களின் போக்குவரத்து பாதுகாப்பிற்காகவும் மற்றும் கடல்சார் ஊழியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் நோக்கிலும் ஈரானுக்கு எதிராக அதிகளவிலான தாக்குதல்களை அமெரிக்க படை தொடங்கியுள்ளது.ஈரானிய படைகளின் திறனை குறைக்கும் வகையில், பாதுகாப்பு படை தளபதியின் உத்தரவின்பேரில் இந்த தாக்குதல் நடத்தப்படுகிறது என தெரிவித்து உள்ளது.இதன்படி,ஈரானின் தெற்கு நகரங்களானஜாஸ்க்,பந்தர் அப்பாஸ்மற்றும்சிரிக் ஆகிய 3 முக்கிய நகரங்களில் குண்டுவெடிப்பு தாக்குதல்களுக்கான சத்தம் கேட்டது.

ஈரானுக்கு எதிராக நேற்று முன்தினம் 3-வது சுற்று தாக்குதல்களை அமெரிக்கா நடத்தி முடித்துள்ளது. ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் வர்த்தக கப்பல் ஒன்றை தாக்கியதற்கு பொறுப்பேற்க செய்யும் வகையில் ஈரானிய படைகளுக்கு எதிராக இந்த தாக்குதல் நடந்துள்ளது.


## வரி விளம்பரங்கள்




தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரிக்கவில்லை; பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம்; சுகாதாரத்துறை தகவல்




ஆந்திராவில் கடப்பா மற்றும் அன்னமய்யா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். மேலும் 8 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சூழலில் ஆந்திராவைச் சேர்ந்த ஒருவர் வேலூர் சிஎம்சியில் அனுமதிக்கப்பட்டு கொரோனா பாதிப்பு காரணமாக உயிரிழந்தார் என்று தகவல் பரவியது.

இது குறித்து வேலூர் மாவட்ட சுகாதார அதிகாரி விஜயசந்திரன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "என். சுப்புராயடு என்பவர் 'செப்டிசீமியா' பாதிப்புக்காக ஜூன் 28-ந்தேதி சி.எம்.சி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பல்வேறு உடல்நல பாதிப்புகள் இருந்தன. அனுமதிக்கப்பட்ட அன்றே அவர் உயிரிழந்து விட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரிக்கவில்லை என தமிழக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தில், "தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரிக்கவில்லை. தேவையான அனைத்துகொரோனா தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கடந்த ஆண்டுகளை விட நடப்பாண்டில் கொரோனா பாதிப்பு குறைவாக உள்ளது. எனவே பொதுமக்கள் யாரும் அச்சமடைய தேவையில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவையில் பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் கராத்தே வீரர்களுக்கு கருப்பு பெல்ட் வழங்கும் விழா




கோவையில் பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் 20 மேற்பட்ட பள்ளியை சேர்ந்த கராத்தே வீரர் வீராங்கனைகளுக்கு கராத்தே சிறப்பு பயிற்சி முகாம்கோவை உக்கடம் பகுதியில் உள்ள தரீக்கத்துல் இஸ்லாம் நர்சரி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்த கராத்தே பயிற்சி முகாமானது, கசராத்தே மாஸ்டர் சிஹான் ஜெமிஷா மேற்பார்வையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தரீக்கத்துல் இஸ்லாம் நர்சரி பள்ளி தாளாளர் அபுல் ஹுதா தலைமை தாங்கினார். பள்ளி தலைவர் முன்னிலை வகித்தார். பேகம் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினராக டாக்டர் ஆஜரா,கலந்துகொண்டு, மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புரை ஆற்றினார். முன்னதாக கராத்தே சிறப்பு பயிற்சி முகாமில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பர்ஹான்.சுலைமான். சக்கீர். ஹாரூன். பர்ஹான். ஆகியோர்க்கு பள்ளி தாளாளர் அபுல் ஹுதா அவர்கள் பிளாக் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார். மேலும் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் பக்கீர் அம்மாள் மற்றும் துணை ஆசிரியர் ரிஜ்வானா பேகம் ஆகியோர் பல்வேறு வகையான கலர் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கினார்கள் நிகழ்ச்சி முடிவில் கராத்தே பயிற்சியாளர் முக்தார் பாஷா நன்றி கூறினார்

# மூன்று தலைமுறைகளாக குடியிருக்கும் வீடுகளுக்கு பட்டா இன்றி தவிக்கும் மா.குடிக்காடு பட்டியலின மக்கள்

கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே உள்ள மா.குடிக்காடு



கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இதில் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் 30-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றன.

இந்நிலையில், தங்களது முன்னோர்கள் காலம் முதல் தொடர்ந்து மூன்று தலைமுறைகளாக வசித்து வரும் வீடுகளுக்கு இதுவரை இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

மேலும், வீட்டு வரி, குடிநீர் வரி, மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரிகளையும் முறையாகச் செலுத்தி வருவதாகவும், கடந்த ஆட்சி காலத்தில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் இலவச வீட்டு மனை பட்டா கோரி பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

வீடுகளுக்கு பட்டா இல்லாத காரணத்தால் அரசின் பல்வேறு நலத்திட்டங்களையும் சலுகைகளையும் முழுமையாகப் பெற முடியாமல் அவதிப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

எனவே, பல தலைமுறைகளாக குடியிருந்து வரும் தங்களது நிலையை அரசு மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு இலவச வீட்டு மனை பட்டா வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருவெண்ணைநல்லூரில் குட்கா விற்பனை செய்த இரு நபர்களை காவல் நிலைய போலீசார் கைது செய்துள்ளனர்



மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S. மதிவாணன் IPS.,அவர்களின் உத்தரவின் பேரில்

திருவெண்ணைநல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள கடைகளில் காவல் உதவி ஆய்வாளர் திரு. சின்னப்பன் திரு. மாதவன் மற்றும் காவலர்கள் தலைமையில் திடீர் சோதனையில் ஈடுபட்டபோது ஆமூர் மற்றும் கொண்ட சமுத்திர பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள பங்கு கடைகளில் விற்பனைக்காகவைத்திருந்த குட்கா போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு கீழ்க்கண்ட எதிரிகளை கைது செய்யப்பட்டு எதிரிகளிடமிருந்து 9.530 கிலோ குட்கா போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். எதிரிகள் 1.ஆனந்தராஜ் (35) த/பெ சண்முகம் நடுத்தெரு, ஆமூர் கிராமம் திருவெண்ணைநல்லூர் தாலுகா

2.ராமதாஸ் (28) த/ பெ ராமமூர்த்தி மாரியம்மன் கோயில் தெரு, கொண்ட சமுத்திர பாளையம் திருவெண்ணைநல்லூர் தாலுகா.

Property
1. Hans-525 No's
2. Vimal - 180 No's
3. Coollip - 248 No's





# செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருவூர் அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்

## திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் அமுதா பங்கேற்பு

திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் தலைமை ஆசிரியர் ஆர்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் லாவண்யா ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்றார், நிர்வாகிகள் ஜெயக்குமார், சதீஷ்குமார், நிரஞ்சன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் இந்த கல்வி ஆண்டின் முதல் பள்ளி மேலாண்மை கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் மதிப்புமிகு எஸ்.அமுதா கலந்து கொண்டு பள்ளி வளர்ச்சிக்கு எவ்வாறு செயல்படவேண்டும்மேலாண்மைக் குழுவின் பங்கு என்ன மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் சுற்றுச்சுவர் அமைக்கவும் , கலையரங்கம் கட்டவும் நுழைவு வாயில் பெரியதாக்கி பாதுக்காப்பை பல படுத்துதல் இரவு மற்றும் பகல் நேரம் என இரு வேலையும் காவலர்களை நியமிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை அணுகிகட்டமைபுக்களை மேம்படுத்தல் உள்ளிட்ட தீர்மாணங்கள் நிறைவேற்ற பட்டது மேலும் நிகழ்வில நிர்வாகிகள் காந்தராஜ், மூர்த்தி, குணசேகரன் ,ஆசிரியர்கள் பி.மணிகண்டன், ஜே.வசந்த், கோமளா, ராஜேஸ்வரி B , கோகுல், சங்கரலிங்கம், சுரேஷ் உள்ளிட்ட ஆசிரியர்கள்,பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர் முடிவில் முன்னாள் மாணவ உறுப்பினரும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி கூறினார்

அதேபோன்று திருவூர் அரசு ஆதிதிராவடர் நல ஆரம்பப்பள்ளியிலும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் பொறுப்பு தலைமையாசிரியர் கி.விஜி அனந்தநாயகி தலைமையிலும் மேலாண்மைக் குழு தலைவர் அ.ஆனந்தி அனைவரையும் வரவேற்றார் துணைத் தலைவர் ம.பூர்ணிமா முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவரும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் ( கல்வியாளர்)சா.அருணன் அவர்கள் கலந்துக் கொண்டு பள்ளியின் வளர்ச்சி மற்றும் மாணவர்கள் சேர்க்கை அதிகப்படுத்த என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைவரும். ஒன்றிணைந்து செயல்பட்டு மாணவர் செர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் என்றார் இக்கூட்டத்திற்கு பெற்றோர்கள் பெருமளவில் கலந்துக் கொண்டனர் முடிவில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக ஆசிரியராக நிமிக்கப்பட்டுள்ள ஆசிரியை பா.தீபா நன்றி கூறினார்



அன்னையின் உதவும் கரங்கள் தொண்டுநிறுவனம் மற்றும் மலைவாழ் மக்கள் குழு நிறுவனர் ஜெயந்தி அவர்கள் மருத்துவ முகாம் இரத்த பரிதோசனை நிலையம் மருத்தவ குழு அமைப்பளார் மணிகண்டன், DMLT. மற்றும் தொண்டு நிறுவனங்கள் சமூக அர்வளர்களில் சிறந்த சேவையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் தமிழக வெற்றக்கழகம்சார்பில்போடிநகரச்செயலாளர்ஆண்டிசாமிஅவர்களும்நகரநிர்வாகிகளும் விழாவில் கலந்துகொண்டனர் இணையும் கரங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பிலும் கிஷோர்குமார் கலந்து கொண்டு சிங்கபெண் சார்பு ஆய்வாளர் அவர்களக்கு Formar DGP பிரதீப் வி பிலீப் IPS (FOP நிறுவனர் )அவர்களது தமிழ்வடிவ புதியகுறள் மொழி (fillipisms) புத்தகம் National Crime intelligence Agency சார்பிலும் கலந்து கொண்டம் விழாவில் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த NGO களின் திட்டங்கள் குறித்தும் சிறந்து விளக்க உரை அளிக்கப்ட்டது.



கீழப்பாவூர் ஒன்றியம் கல்லூரணி ஊராட்சியில் ஊராட்சி மன்றம் மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாம் நிகழ்ச்சி பாவூர்சத்திரம் சமுதாய நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சியை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். நிகழ்ச்சியில் முன்னாள்மாவட்டதிமுகசெயலாளர்சிவபத்மநாதன்தொழில்அதிபர் சேவியர் ராஜன் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எல்லாம் குமார் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ் கழக வழக்கறிஞர் அரிகிருஷ்ணன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் செட்டியூர் ஹரி ஒயிட் ராஜாஆல்வின்ராஜாசுந்தர்ராஜ்குருசிங்ஊராட்சிஉறுப்பினர்பொட்டு தாய் தங்கப்பாண்டியன் அருள் ஜூலியஸ் மற்றும் பரிசோதனைக்கு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் அகர்வால் மருத்துவமனை மருத்துவர்கள் மருத்துவ பரிசோதனை செய்தார்கள்.

# சங்கராபுரம் அருகே 3 டன் ரேஷன் அரிசி கடத்தியவரை போலீசார் கைது செய்து 3 டன் அரிசியை பறிமுதல் செய்தனர்



சங்கராபுரம் ஆற்றுப்பாலம் அருகே சப் இன்ஸ்பெக்டர் பிரதாப்குமார் வாகன சோதனையில் ஈடுபட்டார். அப்போது, அந்த வழியாக வந்த பிக்அப் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில், 3 டன் ரேஷன் அரிசி கடத்தி வந்தது தெரியவந்தது.

விசாரணையில், அரிசி கடத்தியவர் சங்கராபுரம் அடுத்த எஸ்.வி.பாளையம் கிராமத்தைச் சேர்ந்த அய்யாகண்ணு மகன் வினோத்குமார், 32; என தெரியவந்தது. உடன் அவரை கைது செய்து, வேன் மற்றும் ரேஷன் அரிசி மூட்டைகளை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

# கோவை ஆலாந்துறை அடுத்த ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற 150வது இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம்

## பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்றது



கோவை ஆலாந்துறை அடுத்த ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற 150-வது இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம், பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது

கங்கா மருத்துவமனையின் பிளாஸ்டிக் மற்றும் மார்பக அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜா சண்முககிருஷ்ணன்,செய்தியாளர்கள் பேசும்போது. 2022 முதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் இந்த முயற்சியின் 150-வது முகாம் இதுவென தெரிவித்தார்.

இதுவரை 10,122 பெண்களுக்கு இலவசமாக மார்பக புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன், 81 பேருக்கு முழுமையான சிகிச்சையும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், இந்த முகாமில் பரிசோதனை மட்டுமின்றி, மேமோகிராம், அல்ட்ராசவுண்ட், பயாப்ஸி, அறுவை சிகிச்சை, கீமோதெரபி, ரேடியோதெரபி என முழுமையான சிகிச்சை வசதிகளும் இலவசமாக வழங்கப்படுவதாக தெரிவித்தார்.18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பெண்களும் மாதம் ஒருமுறை சுய மார்பக பரிசோதனை செய்ய வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை மேமோகிராம் பரிசோதனை மேற்கொண்டால், மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முழுமையாக குணப்படுத்த முடியும் என டாக்டர் ராஜா சண்முக கிருஷ்ணன் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கழிவுநீர் ஓடையை ஆக்கிரமிப்பு செய்து புதியதாக கட்டிய கட்டிடம்



தென்காசி மாவட்டம் சாம்பவர்வடகரை கீழூர் பஸ் ஸ்டாண்ட் தென்புறம் கலையரங்கம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து பணி தொடங்கி ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளதால் அதை முறைப்படி அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி அதன்பின் கலையரங்கப் பணியை மேற்கொள்ளுங்கள் என வந்த புகாரை அடுத்து பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அளவீடு செய்து ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு வரும் சூழலில் கடையநல்லூர் வட்டாட்சியர் கட்டிடங்களை அகற்ற தமாதபடுத்தி வருவதுடன் தற்போது வையாபுரி மகன் பொன்னையா என்பவர் கழிவு நீர்ஓடையை குறுகலாக்கி மூடியதுடன் மெயின் ரோட்டையும் ஆக்கிரமித்து புதிதாக கட்டிடம் கட்டி வருகிறார் அதற்கு கட்டிட அங்கீகாரம் பேரூராட்சி வழங்க கூடாது எனவும் முறையாக அளவீடு செய்து கழிவு நீர் ஓடை செல்வதற்கு நீர்வழித்தடத்தை உறுதி செய்த பின்பு கட்டிட அங்கீகாரம் வழங்கவும் கலையரங்கம் கட்டவும் எந்தவித தடையும் இல்லை என பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



காமராசர் அரசு கலைக்கல்லூரியில் இன்று போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நிகழ்வில் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள், 30 பேராசிரியர்கள் கலந்து கொண்டு போதைக்கு எதிரான உறுதிமொழி ஏற்றனர். விழா சிறப்பு விருந்தினராக தலைமை செயலக அதிகாரி, திருநெல்வேலி, தென்காசி இணை ஆணையர் (கலால்) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். பங்கு பெற்ற அனைவருக்கும் நன்றி. NSS திட்ட அலுவலர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.

# கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல்கேர் மருத்துவமனை சார்பாக நரம்பியல் தீவிர சிகிச்சை குறித்த மருத்துவ கருத்தரங்கம்

## நாடு முழுவதிலும் இருந்து மருத்துவ நிபுணர்கள் பங்கேற்று தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்



கோவை நீலாம்பூர் பகுதியில், உள்ள தனியார்நட்சத்திரவிடுதியில், கோவை ராயல் கேர் மருத்துவமனை சார்பில் நரம்பியல்தீவிரசிகிச்சை தொடர்பான மருத்துவ கருத்தரங்கம் நடைபெற்றது. மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கின் வாயிலாக,மருத்துவர்கள், மற்றும் செவிலியர்களுக்கான பயிற்சி பட்டறை முகாம் நடைபெற்றது..

தொடர்ந்து இறுதி நாளில் நடைபெற்ற

கருத்தரங்கில் பக்கவாதம், மூளையில் ரத்தக்கசிவு, தலையில் ஏற்பட்ட காயங்கள், மூளைச்சாவு மற்றும் உறுப்பு தானம், வலிப்பு, மூளை மற்றும் நரம்பு தொற்றுகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நிபுணர் மருத்துவர்கள் உரையாற்றி, மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள புதிய சிகிச்சை முறைகள் குறித்து விளக்கமளித்தனர்.

இதில் பல்வேறு பகுதிகளில் இருந்து மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்கள் என முன்னூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். முன்னதாக இதன் துவக்க விழா ராயல் கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரும் தலைவருமான மருத்துவர்மாதேஸ்வரன்தலைமையில் நடைபெற்றது.. சிறப்பு விருந்தினராக ராம் ராஜகோபாலன் கலந்து கொண்டு கருத்தரங்கை துவக்கி வைத்தார்..

இக்கருத்தரங்கில் மருத்துவர்கள் மேத்யூ ஜோசப், சிவக்குமார், மருத்துவ இயக்குனர் பரந்தாமன் சேதுபதி, மருத்துவமனையின் சி.ஓ.ஒ.மணி செந்தில் குமார், பொது மேலாளர் வெங்கடேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மருத்துமனை தலைவர் மாதேஸ்வரன் அனைவரது மத்தியிலும் கூறியதாவது.. "மருத்துவத் துறையில் தொழில்நுட்பங்கள் தொடர்ந்து மாறி வரும் சூழலில், இதுபோன்ற கருத்தரங்குகள் மருத்துவர்களின் அறிவையும் திறமையையும் மேம்படுத்த பெரிதும் உதவுகின்றன.

மேலும், மருத்துவத் துறை சார்ந்த இத்தகைய நிகழ்வுகள் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்குவதற்கும், உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன" என தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சித்தாமூர் அருகே

# அதிமுக மகளிர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்

## கழக கொள்கை பரப்பு துணைச்செயலாளர் காளியம்மாள் உரையாற்றினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள சரவம்பாக்கம் கூட்டு சாலையில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக மகளிர் அணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தை செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் மகளிர் அணி செயலாளர் கீதா கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டசெங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம்

எஸ். ஆறுமுகம், மாநிலங்கவை உறுப்பினர் தனபால், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பெரும்பாக்கம் ராஜசேகர், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் காளியம்மாள் இவர்கள் கலந்து கொண்டு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் அப்போது கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் காளியம்மாள் பேசுகையில் இந்த தமிழக வெற்றிக்கழக ஆட்சியில் அவர்கள் அறிவித்த சிறப்பு சிங்க பெண் அதிரடி படை காவலருக்கே இந்த ஆட்சியில் இரவு 9:00 மணிக்கு மேல் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை அந்தக் காவலர்களையே பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார்கள் குழந்தைகள் முதல் முதியவர் வரை இந்த ஆட்சியில் கஞ்சா போதையில் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்படுகிறார்கள் எங்கு பார்த்தாலும் சட்ட ஒழுங்கு சீர்கேடு உள்ளது என பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என ஆயிரக்கணக்கானோர்கலந்துகொண்டனர்.



### முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு

# தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய அமைச்சர் ராஜ்குமார்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் நகராட்சியில் பணியாற்றும் 250-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் பிறந்தநாளைமுன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளரும்,ஊரகவளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சருமான புஸ்ஷி ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக வெற்றிக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் கஸ்பா வாசு ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விருத்தாசலம் நகராட்சியில் பணியாற்றும் 250-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு தலா 5 கிலோ அரிசி, புடவை, வேஷ்டி மற்றும்பிளாஸ்டிக் கூடை ஆகிய நலத்திட்டப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சருமான ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் ராஜசேகர்முன்னிலைவகித்தார். கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் விஜய் தலைமை தாங்கினார். கடலூர் வடக்கு மாவட்ட செயலாளர் ஆனந்த்,கடலூர் மேற்கு மாவட்ட இணைச் செயலாளர் சங்கர், விருத்தாசலம் நகர செயலாளர் அப்பாஸ்அலி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள்,கட்சியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில், தூய்மை பணியாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிக்கன் பிரியாணியை அமைச்சர் ராஜ்குமார் நேரில் பரிமாறி, அவர்களுடன் கலந்துரையாடி பிறந்தநாள் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டார்.

# கோவை சரவணம்பட்டி பகுதியில் அட்வான்ஸ்டு குரோஹேர் மற்றும் குளோஸ்கின் கிளினிக்கின் 150வது கிளையின் திறப்புவிழா

## தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



இந்தியாவின் முன்னணி முடி மீளுருவாக்கம் மற்றும் சருமப் பராமரிப்பு சிகிச்சை நிறுவனங்களில் ஒன்றான அட்வான்ஸ்டு குரோ ஹேர் மற்றும், குளோ ஸ்கின் கிளினிக், கோவை சரவணம்பட்டியில் தனது புதிய கிளையை திறந்துள்ளது. இந்தியா மற்றும் உலகளவில் 150-க்கும் மேற்பட்ட கிளைகள் என்ற முக்கிய மைல்கல்லையும் இந்நிறுவனம் எட்டியுள்ளது. இக்கிளையின் துவக்கத்தின் மூலம், உலகத் தரத்திலான முடி மற்றும் சரும சிகிச்சைகளை மக்களுக்கு எளிதில் அணுகக்கூடிய வகையில் வழங்கும் தனது நோக்கத்தை நிறுவனம் மேலும் வலுப்படுத்தியுள்ளது.நாடுமுழுவதும் செயல்பட்டு வரும் கிளைகள் மூலம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள இந்த நிறுவனம், சரவணம்பட்டி மக்களுக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உயர்தர சிகிச்சைகளை வழங்க உள்ளது.

இக்கிளையில் அமெரிக்க அரசின் எப்டிஏ அங்கீகாரம் பெற்ற நவீன முடி சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. அதேபோல், பல்வேறு மேம்பட்ட சரும பராமரிப்பு சிகிச்சைகளும் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றது. இக்கிளையை தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும் கோவை மாவட்ட பொருப்பு அமைச்சருமான சம்பத்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் மேலும் இந்த நிகழ்ச்சியில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ், தமிழக வெற்றிக் கழகத்தின் கோவை புறநகர் மாவட்ட செயலாளர் வி. ராஜ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் அட்வான்ஸ்டு குரோ ஹேர் மற்றும் குளோ ஸ்கின் கிளினிக்கின் நிறுவனர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சரண்வேல் ஜெயராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது...

சரவணம்பட்டி கிளையின் துவக்கம் என்பது நிறுவனத்தின் விரிவாக்கம் மட்டுமல்லாமல், அறிவியல் அடிப்படையிலான தரமான முடி மற்றும் சரும சிகிச்சைகளை பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்வதற்கான மற்றொரு முக்கியமான முன்னேற்றம் என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் மீண்டும் கொரோனா பரவுகிறது: 2 பேர் உயிரிழப்பு; 8 பேருக்கு வைரஸ் தொற்று




அமராவதி:ஆந்திராவில்மீண்டும்கரோனாவைரஸ் பரவுகிறது. இந்த வைரஸ் தொற்றால் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.8பேருக்கு வைரஸ்தொற்று உறுதிசெய்யப்பட்டு உள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹான் பகுதியில் கரோனா வைரஸ் பரவுவது கண்டறியப்பட்டது.அங்கிருந்து கடந்த 2020ம் ஆண்டு தொடக்கத்தில் உலகம் முழுவதும் வைரஸ் பரவியது. கடந்த 2020 முதல் 2021 தொடக்கம் வரை இந்தியாவில் முதல் கரோனா அலை ஏற்பட்டது. கடந்த 2021ம் ஆண்டில் இரண்டாம் கரோனா அலையும்,கடந்த 2022ம் ஆண்டு தொடக்கத்தில் மூன்றாம் கரோனா அலையும் ஏற்பட்டன.

மூன்று கரோனா அலைகளின்போது இந்தியாவில் 4.50 கோடி பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். இதில் 5.33 லட்சம் பேர் உயிரிழந்தனர். கடந்த 2022 ஆண்டு மே மாதத்துக்குப் பிறகு உலகம் முழுவதும் கரோனா வைரஸ் பரவல் குறைந்து இயல்பு நிலை திரும்பியது.

இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக ஆந்திராவின் ஒய்எஸ்ஆர் கடப்பா மாவட்ட த்தில் திடீரென கரோனா வைரஸ் பரவி வருகிறது. கடப்பா மாவட்டத்தின் ராஜம்பேட்டை பகுதியை சேர்ந்த 52 வயது நபருக்கு சில நாட்களுக்கு முன்பு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது.மேல்சிகிச்சைக்காகஅவர்வேலூரில் உள்ள சிஎம்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கரோனாவின் ஒமைக்ரான் வைரஸ் பாதிப்பால் அவர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடப்பாவை சேர்ந்த 43 வயது நபர் அண்மையில் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. அங்குள்ள அரசு மருத்துவமனையின் கரோனா தீவிர சிகிச்சை பிரிவில் அவர்சிகிச்சைபெற்று வந்தார்.அவரும்சிகிச்சைபலனின்றி உயிரிழந்து உள்ளார்.


இந்தச் சூழலில் கடப்பா மருத்துவக் கல்லூரியை சேர்ந்த 25 வயது மருத் துவ மாணவருக்கு கரோனா வைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.அவர் தனிமைப்படுத்தப்பட்டுஉள்ளார்.அவரையும்சேர்த்து கடப்பா பகுதியில் இதுவரை 8 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

அவர்களோடு தொடர்பில் இருந்த 40 பேரின் சளி மாதிரிகள் பெறப் பட்டு ஆய்வக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு உள்ளன. இதில் 18 பேருக்கு கரோனா தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. மீதமுள்ளோரின் ஆய்வக பரிசோதனை அறிக்கை விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திராவில் கரோனா வைரஸ் பரவலை தடுக்க அதிதீவிர நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக கடப்பா மாவட்ட பொறுப்பு அமைச்சர் சவிதா, மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர், மாவட்ட சுகாதாரத் துறை அதிகாரி ரவி பாபு ஆகியோரிடம் முக்கிய ஆலோசனை நடத்தி உள்ளார். கடப்பா மட்டுமன்றி ஆந்திரா முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. குறிப்பாக அரசு மருத்துவமனைகளில் தனி வார்டுகள், ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், வென்டிலேடர்கள், ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.


# வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 17 ந் தேதி நடைபெறவுள்ளது

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்டத்தில் ஜுலை -2026 ஆம் மாதத்திற்கான வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம்தள கூட்ட அரங்கில் 17.07.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணி முதல் 11.30 வரை மனுக்கள் பெறப்படும். 11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கலாம். பிற்பகல் 12.30 முதல் 1.30 முடிய அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்பட வுள்ளது. இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# பழங்குடியின மக்களுக்கான இலவச மருத்துவ முகாம்



ஆண்டிபட்டி தாலுகா கண்டமனூர் வனச்சரகத்திற்குட்பட்ட கடமலைக்குண்டு அருகே கரட்டுப்பட்டி மலைஅடிவாரக் கிராமத்தில் 35 மலைவாழ் பழங்குடியின குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

தேனி மாவட்ட சிறப்பு இலக்கு படை நுண்ணறிவுபிரிவுதலைமையில் பழங்குடியின மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.இதில் மருத்துவர்கள் செளந்தர்யா,லிஷா, செவிலியர் ஜான்சிபிரபா, தெய்வமலர், மற்றும் மருந்தாளுநர்கள் ரஞ்சித்குமார், ரமேஷ் ஆகியோர் மலைக்கிராம மக்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டனர். இதில் தொற்று நோய் கண்டறியப்பட்டவர்களுக்கு உடனடியாக தகுந்தமருத்துவசிகிச்சை அளிக்கப்பட்டது.மேலும் தொற்று அதிகம் இருந்தவர்களை மேல் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மேலும்டெங்குகாய்ச்சல் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நெகிழிப்பை பயன்படுத்தக் கூடாது எனவும், மஞ்சப்பை பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும் பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.முகாமிற்கு தேவையான மருந்து மாத்திரைகள் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மயக்கவியல் துறை உதவிப் பேராசிரியர் மருத்துவர்பெரியசாமி வழங்கினார்.

# கோவையில் பிரம்மாண்டமாக நடைபெற்ற ரோட்ராக்ட் அமைப்பின் 'டேக் ஆஃப்' மாநாடு : 1,200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர்



கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் ரோட்ராக்ட் அமைப்பின் புதிய மாவட்ட நிர்வாகிகளுக்கான பதவியேற்பு விழா மற்றும் பயிற்சி கருத்தரங்கம் 'டேக் ஆஃப்' என்ற பெயரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழா குறித்து ரோட்ராக்ட் கிளப் ஆஃப் கோவை கேலக்ஸி அமைப்பைச் சேர்ந்த ஜெய் கிஷோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ரோட்டரி அமைப்பின் இளைஞர் பிரிவான ரோட்ராக்ட் மாவட்டத்தின் இந்த ஆண்டிற்கான புதிய தலைவராக ரோட்ராக்ட் கிளப் ஆஃப் கோவை கேலக்ஸியைச் சேர்ந்த விஜய் விக்னேஷ் பொறுப்பேற்றுள்ளார். இந்த ஆண்டில் அவரது தலைமையின் கீழ் சுமார் 2,500க்கும் மேற்பட்ட ரோட்ராக்ட் உறுப்பினர்கள் இணைந்து பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

இன்று நடைபெற்ற 'டேக் ஆஃப்' மாநாட்டை ரோட்ராக்ட் கிளப் ஆஃப் கோவை கேலக்ஸி, பி. எஸ்.ஜி கிருஷ்ணம்மாள் கல்லூரி மற்றும் ஹிந்துஸ்தான் கல்லூரி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தியுள்ளன. இதில் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து 1,200க்கும் மேற்பட்ட மாணவ பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

18 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கொண்டு இயங்கும் இந்த சமூக நல அமைப்பின் மூலம், இந்த ஆண்டில் பொதுமக்களுக்கான சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், சுற்றுச்சூழல் திட்டங்கள் மற்றும் முக்கியமாக ஸ்பெஷல் குழந்தைகள் எனப்படும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் நலனுக்காகப் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநாட்டில் பங்கேற்ற மாணவர்களுக்குத் தலைமைப் பண்பு மற்றும் சமூக சேவைகளுக்கான பிரத்யேக பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன என்று அவர் கூறினார். இந்த மாநாட்டில் ரோட்ராக்ட் அமைப்பின் புதிய நிர்வாகிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் திரளான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ மூலம் ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) பயனாளிக்கு வழங்கினார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தாட்கோ பொது மேலாளர் முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம், விஜயமங்கலம்அரசுஆரம்பசுகாதாரநிலையம்வெளிநோயாளிகள்காத்திருக்கும்அறைதிறப்புவிழாவினைகுத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசினர் தொழிற்பயிற்சி மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.07.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027ஐ முன்னிட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

# From AIPMT to NEET: A decade of paper leak scandals that shook India's education system




*Over the past decade, India's education system has been rocked by a series of scams that have exposed vulnerabilities far beyond examination halls. From recruitment fraud to paper leaks, from admission fraud to fake appointment scams, almost every stage of the education ecosystem has come under scrutiny at some point.*

*High-profile cases such as the Vyapam recruitment and admission scam, the REET and UPTET controversies, the NEET-UG and UGC-NET irregularities, and, most recently, Maharashtra's TET paper leak, reveal how technology and administrative loopholes have been exploited in different ways.*

*AIPMT Paper Leak in 2015: The All India Pre-Medical Entrance Test was held on May 3, 2015. Reports later claimed that 90 answer keys were leaked electronically to candidates in exchange for 15-20 lakh. The Rohtak police arrested seven people, including two doctors and an MBBS student, for the alleged wrongdoing.*

*CBSE Class 10 Maths & Class 12 Economics Paper Leak in 2018: The papers were leaked and circulated nationally and internationally on WhatsApp. Three teachers, Rishabh, Rohit and Tauqeer, were arrested by the Delhi Police. The Board conducted the re-exam for 28 lakh students.*

*REET Paper Leak in 2021: The question papers of Rajasthan Eligibility Examination for Teachers, which were held on September 26, 2021, were leaked two days before the exam. According to the police probe, the question paper was stolen from an office of the state education department, thereafter leaked, and the accused have received at least Rs. 1.22 crore in exchange for the paper.*

*NEET-UG Paper Leak in 2024, 2026: The exam was held on May 5, 2024. The exam faced allegations of question paper leak. In Patna, Bihar, police arrested 13 people, including four examinees, who had allegedly paid 30 to 50 lakh to obtain the question paper beforehand. In Godhra, Gujarat, a raid at an exam centre revealed that a teacher, who was also the deputy superintendent, instructed students not to answer questions they didn't know, promising to fill in the answers. Five people were arrested, and it was discovered that candidates from multiple states had taken the exam at this centre. The cases were handed over to the Central Bureau of Investigation (CBI).*

*Similarly, in 2026, the exam was held on May 3, 2026. The paper leak allegations were made. The Centre cancelled the examination and announced a re-exam. The paper leak case was handed over to the CBI, which conducted a comprehensive inquiry into the allegations linked to the exam.*

*UGC NET cancellation 2024: The exam was held in June 2024. The Ministry of Education cancelled the examination after intelligence reports suggested irregularities in its conduct. The Ministry said that the UGC received inputs from the National Cyber Crime Threat Analytics Unit of the Indian Cyber Crime Coordination Centre (I4C) that the integrity of the exam might have been compromised, after which the decision to cancel the exam was taken. The matter was later handed over to the Central Bureau of Investigation (CBI) for a thorough investigation.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.